1121

1/2)

இளைஞர் பயில்

கல்விநெறி விளக்கம்

மூலமும்-உரையும் கதையும்

(முதற் பாகம்)

OFFICE OF THE REGISTRAR OF ...
30 NOV 1933

இஃது

கவிபூஷணம்-செ. கோ. கணபதி புலவர்

இயற்றியது.

உ

ஸ்ரீ கணநாயகர் அச்சுக்கூடம்

2/229, தங்கசாலை தெரு

ஜி. டி மதராஸ்

1933. [விலை அணா 2½.

TB
031,1(5)
N33

இளைஞர் பயில்

கல்விநெறி விளக்கம்

மூலமும்-உரையும் கதையும்

(முதற் பாகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 NOV 1933

இஃது

கவிபூஷணம்-செ. கோ. கணபதி புலவர்

இயற்றியது.

ஸ்ரீ கணநாயகர் அச்சுக்கூடம்
2/229, தங்கசாலைத்தெரு,
ஜி. டி. மதராஸ்.

(ரிஜிஸ்டர் காப்பிரைட்)

முகவுரை.

இப் பூவுலகின்கண் கல்வி கேள்விகளால் நிறைந்த பெரியோர்கள், தாம்கற்றவை பலருக்கும் பயன்படுமாறு செய்யுள் ரூபமாகவும், வசன வடிவமாகவும், கல்வியைக்கற்கும் முறைகளை எழுதிய பல புத்தகங்களை வெளியிட்டுப் புகழுடமைப் பெற்றனர்; பெறுகின்றனர். அழகிய கலாபத்தை விரித்தாடும் மயிலினைக்கண்ட வான்கோழித் தானும் தனது அற்பச்சிறகை விரித்தாடத் துணிந்ததுபோல் யானும் "இளைஞர்கள்" கல்வியைக் கற்கவேண்டிய முறைகள் பலவற்றிலும் சிறந்தவைகள் என என் சிற்றறிவுக்குப் புலப்பட்ட முறைகளை, எளியபதங்களா லாக்கப்பட்ட நேரிசை வெண்பாக்களால் இக்காலத்தின் கல்வியிலாகா விசாரணைத் தலைவர்களின் கருத்துக்கிணங்க அவ் வெண்பாக்களுக்குத் தகுந்த சிறு கதைகளினுலும் விளக்கி "இளைஞர் பயில் கல்வி நெறிவிளக்கம்" என்னும் இச் சிறியபுத்தகத்தை வெளியிட்டேன். யானும் என்னைப்போன்றவர்களும் உற்சாகமடைந்து, பெரியோர்களது கடமையைப் பின்பற்றி யொழுக ஆன்றோர்கள் இதிலுள்ள மிகச் சிறியபொருளையே கைக்கொண்டு இப்புத்தகம் இனிது நடைபெறுமாறு ஆதரிக்கக் கோருகின்றேன்.

சே. கோ. கணபதி புலவர்.

உ

இளைஞர் பயில்

கல்விநெறி விளக்கம்

மூலமும்-உரையும் கதையும்

கடவுள் வணக்கம்

நேரிசை வெண்பா

இளைஞர் பயில்கல்விக் கேற்ற நெறிப்பா
அலைகடல் சூழு மவனி—தளர்வின்றிக்
காத்தும் பலநாளும் கண்களிக்க அன்பரகம்
பூத்த மருமலர்த்தாள் போற்று.

(பதவுரை.) இளைஞர்-சிறுவர், பயில்-படிக்கும், கல்விக்கு-படிப்பிற்கு, ஏற்ற-தகுதியாகிய, நெறி-வழியை, (போதிக்கும்) பா-வெண்பாக்களால், (செய்துள்ள இப்புத்தகத்தை) அலை-திரைகளையுடைய, கடல்-சமுத்திரத்தால், சூழும்-சூழப்பட்ட அவனி-உலகத்தில்உள்ளவர்கள், தளர்வு-சோர்வு, இன்றி-இல்லாமல், பலநாளும்-எப்பொழுதும், காத்து-நிகழச்செய்து, கண்களிக்க-கண்கள்மகிழ, மரு-வாசனையையுடைய, மலர்-பூப்போன்ற, தாள் (கடவுளின்) பாதங்களை, போற்று-வணங்கு.

காலை எழுந்து கடன்கழித்துப் பல்துலக்கி
ஓலைகொடு நாவழித்து ஓங்குமுகம்—கோலமுற
நன்னீர்க் கொடுகழுவி நாளும் பெரியோர்கள்
உன்னும் மதநெறியை உள்.

(ப-ரை.) காலை-அதிகாலையில், எழுந்து-(படுக்கையிலிருந்து) எழுந்து, கடன்கழித்து-ஜல மலங்களைப் போக்கி, பல்துலக்கி-பல்லுகளை மெது வான பல்பொடி அல்லது பால்உள்ள குச்சிகளினால் விளக்கி, ஓலை-பனையோலை (அல்லது தட்டையானதை) கொடு-கொண்டு, நாவழித்து-நாக்கின் அழுக்கைப்போக்கி, ஓங்கும்-வளர்கின்ற, முகம்-முகம், கோலம்-அழகு, உற-பொருந்த, நல்நீர்-சுத்தமான ஜலத்தை, கொடு-கொண்டு, கழுவி-சுத்தம்செய்து, நாளும்-எப்பொழுதும், பெரியோர்கள்-உனது பெரியோர்கள், உன்னும்-நினைக்கின்ற, மதநெறியை-கடவுள்வழிப்பாட்டை, உள்-நினை.

(கதை.) நந்திக்கிராமத்தில் பொன்னன் என்று ஒரு குடியானவன் இருந்தான். அவன் மனைவி எல்லம்மாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் நல்ல தம்பி. இளையவன் பெயர் சுப்பன். மூத்தவனாகிய நல்லதம்பி அதிகாலையில் எழுந்திருப்பான். மலஜலங்களைக் கழித்துக் கால்களையுங் கைகளையும் கழுவுவான். பால் உள்ள குச்சி அல்லது மெது வான பொடிகளைக்கொண்டு பல்லுகளில் உள்ள

அழுக்கு (ஊத்தை)போக விளக்குவான். பனை யோலையினுல் நாக்கின் அழுக்கை வழிப்பான். பலதரமும் வாய்நிறைய நீர்கொண்டு கொப்பளிப் பான். கைநிறைய நீர்கொண்டு கண்களில் உள்ள பீளைகளும் முகத்தின் அழுக்கும்போக நன்ருய்க் கழுவுவான். அழுக்கில்லாத துணியினுல் கழுவின பாகங்களைத் துடைப்பான். தன்னைப்பெற்ருேர்கள் வணங்கும் கடவுளைக் கும்பிட்டு, அப்பம் உண்டு விளையாடுவான். சுப்பனே நெடுநேரம் தூங்கு வான்; எழுந்தவுடன் அடுப்பங் கரைக்குப் போய் ஒரு சிறு சாம்பல் புடை யெடுப்பான் பல்லின் நுனியில் வைத்து, இரண்டுதரந் தேய்த்து, வாய் நிறையாத நீரினுல் கொப்பளிப்பான்; ஈரக் கையினுல் முகத்தைத் துடைத்தாலும் துடைப் பான்; விட்டாலும் விடுவான்; அப்பமுண்டு விளையாடுவான். பொன்னனும் எல்லம்மாளும் தங்களுடைய வேலைகள் ஒழிந்து, சந்தோஷ மாகப் பேசிக்கொண் டிருக்கும் போது, தங்கள் மேல்விழுந்து விளையாடவரும் நல்ல தம்பியைக் கட்டியணைத்துப் பலதரமும் முத்த மிடுவார்கள்; சுப்பனை அருவருப்பார்கள். மற்றவர்களும் சுப்ப னைக் கிட்டவும் சேர்க்கார்கள். சுப்பனுடன் விளை யாடும் சிறுவர்களும் சுப்பனுக்கு "ஊத்தைப் பல் லன், நாற்றமுள்ளவன்" என்று பெயரிட்டு அழைத்தார்கள். அதனுல், அவன் வெட்கப்பட் டுத் தன் அண்ணனைப்போலச் செய்ய ஆரம்பித் தான்.

சேங்கமலக் கைகூப்பிச் சென்னிமிசை வைத்தன்பாய்
இங்குவளர் மென்கொடிகா யெல்லையிலாப்—பைங்கூழ்
சுகம்பெருக்கும் பூக்கள் சுடரதனல் வளர்க்கத்
தகுமிரவி நன்றியுன்னித் தாழ்.

(ப-ரை.) இங்கு-இவ்வுலகத்தில், வளர்-வளர்கின்ற, மெல்-மெதுவாகிய, கொடி-கொடிகள், காய்-காய்கள், எல்லையிலா-அளவற்ற, பைங்கூழ்-பசுமையாகியபயிர்கள், சுகம்-அழகை, பெருக்கும்-அதிகங் கொடுக்கும், பூக்கள்-மலர்களையும், சுடரதனல்-(தனது) ஒளியினல், வளர்க்கத்தகும்-வளர்த்தற்குரிய, இரவி-சூரியனுடைய, நன்றி-உபகாரத்தை, உன்னி-நீ நினைத்து, செங்கமலம்-சிவந்ததாமரைப் பூப்போன்ற வுனது, கை-கைகளைக், கூப்பி-சேர்த்து, சென்னிமிசை-தலைமேல், வைத்து-வைத்து, அன்பாய்-அன்போடு, தாழ்-வணங்கு.

(கதை.) சங்கரஐயர் இராப்போஜனம் உண்டபின் காற்றுக்காகத் தெருத்திண்ணையில் உட்கார்ந்திருந்தார். உள்ளேயிருந்த குப்புசாமி சங்கரஐயரிடம் வந்தான். குப்புசாமி, “அப்பா இப்பொழுது மணியெத்தனை?” யென்றான். ஐயர், “ஒன்பதுமணி யிருக்கு” மென்றார். குப்புசாமி, “இதற்குள் வீதியில் ஒருவரும் நடமாடவில்லையே இன்னும் நேரமானல் எப்படியிருக்கும்” என்றான். ஐயர் “இன்னும் நேரமானல் காற்றுக்காக என்

னைப்போல் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் இரண்டொருவரும் வீட்டிற்குள் போய்விடுவார்கள்" என்றார். குப்புசாமி, "அப்பா அப்பொழுது மெத்த பயமாயிருக்குமல்லவா?" என்றான். ஐயர், "ஆம்" என்றார். குப்புசாமி, "பயத்தைக் கொடுக்கும் இந்த இரவு எப்பொழுது ஒழியும்" என்றான். ஐயர், "உன்னுடைய படுக்கை அறையிலிருக்கும் சன்னலின்வழியாய்த் தனது இளங் கிரணங்களாகிய கைகளைச்செலுத்தி உன்னைத் தூக்கத்தினின்று எழுப்பும் ஒருவர் வந்தால் பயம் ஒழியும்" என்றார். குப்புசாமி, "என்ன அப்பா! என்னை யெழுப்பும் வேலைக்காரனை ஒருவர் என்று, வெகுமரியாதையாகச் சொல்லுகிறீர்களே? அவன் என்னைச் சன்னலின்வழியாக எழுப்புவதில்லைக் கதவைத் திறந்து வந்து தட்டி யெழுப்புகிறான்" என்றான். ஐயர், "நான் அவனைச் சொல்லவில்லை; இந்த வுலகத்தில் உள்ள; ஜீவகோடிகளையெல்லாம் எழுப்பி அவரவர் வேலையைச் செய்யும்படிச் செய்கின்றவரும், எல்லாரும் உலாவப் பகலைக்கொடுப்பவரும், பச்சைப்பயிர்கள், மரங்கள், செடிகள், பூத்துக் காய்த்துப் பலனைக் கொடுக்கச் செய்பவருமாகிய; ஆயிரங் கிரணங்களையுடைய ஒருவரைச் சொன்னேன்" என்றார். குப்புசாமி, "தெரிந்துகொண்டேன். சூரியன், சூரியன். அவருக்கு வந்தனம் அவசியம் செய்யவேண்டியதுதான்" என்றான். இருவரும் உள்ளேபோய்ப் படுத்துக் கொண்டார்கள்.

சேங்கதிரோன் சந்திரன் சேய்மையுறு விண்மீன்கள்
போங்குகடல் கான்ஆறு பூமிமலைத்—தங்குமுயிர்
எண்ணில் போருள்படைத்து எங்குநிறை ஓர்கடவுள்
வண்ணமலர்த் தாள்கள் வணங்கு.

(ப-ரை.) செங்கதிரோன்-சிவந்தகிரணங்களை யுடையசூரியன், சந்திரன்-சந்திரன், சேய்மை யுறு-தூரத்தில்உள்ள, விண்மீன்கள்-நட்சத்திரங் கள், பொங்கும்-பொங்குகின்ற, கடல்-சமுத்திரம், கான்-காட்டு, ஆறு-நதி, பூமி-தரை, மலை-மலை, தங்கும்-வாழ்கின்ற, உயிர்கள்-உயிர்களையும், எண் ணில்-அளவில்லாத, பொருள்-பொருள்களையும், படைத்து-உண்டாக்கி, எங்கும்-எவ்விடத்திலும், நிறை-நிறைந்திருக்கும், ஓர்-ஒன்றாகிய, கடவுள்- தெய்வத்தின், வண்ணம்-அழகிய, மலர்ப்-பூப் போன்ற, தாள்கள்-பாதங்களை, வணங்கு-கும்பிடு.

(கதை.) கப்பல் வியாபாரி யொருவர், தனது பதினான்குவயதுடைய சிறுவனுடன் கப்பல் யாத் திரை சென்றார். நடுக்கடலில் காற்று அதிகமா யடித்ததனால்; கப்பலின் பாய்மரங்கள் முறிந்து விட்டன. கப்பல்வழிதப்பி, தண்ணீருக்குள் ளிரு ந்த பாறையில் மோதுண்டு, உடையும் சமயமாக விருந்தது. கப்பலில் இருந்தவர்கள் பலவித தந் திரங்களினால் தப்பிப்பிழைக்க வழிதேடினார்கள். வியாபாரியும், சிறுவனும், ஒரு சிறுபடகில் ஏறி, உயிர்பிழைத்து, நெடுந்தூரத்தில் இருந்த வோர் தீவைச் சேர்ந்தார்கள். அத்தீவில் சற்றுத்தூரம்

சென்றபின் ஓர்வீட்டைப் பார்த்தார்கள். இருவரும் அவ்வீட்டின் உள்ளே போனார்கள். அங்கே ஓர் அறையில், மனிதர்கள் சாப்பிடத்தகுந்த பலவித ஆகாரங்கள் இருந்தன. அதனால் மனிதர்கள்யாராவது அங்கிருப்பார்களென்று அவ்வீடுமுழுவதும் தேடினார்கள். ஒருவரும் தென்படவில்லை. சிறுவன், "அப்பா இந்த வீடும் ஆகாரங்களும் இருப்பதனால் இவைகளை யுண்டாக்கியவர்கள் இங்கு இருக்கவேண்டு மல்லவா? என்ன! ஒருவரையுங் காணோமே?" என்றான். தந்தை, "படைத்தவன் இல்லாமல் படைக்கப்பட்டப் பொருள்கள் இருக்கா. ஆகையால், ஒருவர் இருக்கவேண்டும். மகனே! நீ சிலதினங்களுக்கு முன் கடவுள் என்பவர் யார்? அவரை நாம் என் வணங்கவேண்டும் என்று கேட்டாயே ஞாபகமிருக்கிறதா?" என்றார். மகன், "ஆம்" என்றான். தந்தை, "இதோ இங்கு காண்பதைப் போலவே இந்தப் பெரியவுலகத்தையும், இவ்வுலகத்தில் உள்ளவர்கள் உண்ணும் பலவித வுணவுகளையும், உண்டாக்கினவர் ஒருவர் இருக்கவேண்டும் மல்லவா?" என்றார். மகன், "ஆம்" என்றான். தந்தை, "அவர்தாம் கடவுள். அவர் செய்திருக்கும் உதவிக்காக அவரை யெல்லோரும் வணங்கவேண்டும்" என்றார். சிறுவன், "இனி நான் அவரை யெப்பொழுதும் வணங்குவேன்" என்றான். சில நிமிஷங்களுக்குப்பின் வெளியே போயிருந்த வொருவர் வந்தார். அவருடைய ஆதரவினால் இருவரும் அங்கேதங்கி யிருந்தார்கள். 3

தானம் பலபுரிந்து தக்க விரதமிருந்
தூனமிலா நல்தவங்கள் ஓம்பியே—மானமுடன்
ஈன்றெடுத்த தாய்தந்தை யேரார் கழல்களைத்
தான் துதித்துக் கும்பிட்டுத் தாழ்.

(ப-ரை.) பல-அநேக, தானம்-தருமங்கள், புரிந்து-செய்து, தக்க-தகுதியாகிய, விரதம்-நோன்பு, இருந்து-இருந்து, ஊனம்-குற்றம், இலா-இல்லாத, நல்தவங்கள்-நன்மையைக்கொடுக்கின்றதவங்கள், ஓம்பி-பாதுகாத்து, மானமுடன்-பெருமையுடன், ஈன்றெடுத்த-பெற்றுவளர்த்த, தாய்தந்தை-பெற்றோர்களின், ஏரார்-அழகுநிறைந்த, கழல்களை-பாதங்களை, துதித்து-துதித்து, கும்பிட்டு-வந்தனம்செய்து, தாழ்-வணங்கு.

(கதை.) கிராம பள்ளிக்கூடத்தில் சீதாராம் என்ற உபாத்தியாயர் தம்மிடத்தில் படிக்கும் சிறுவர்களுக்குப் பல நீதிகளைப் போதிக்கும் புத்தகங்களில் உள்ள கதைகளைச் சொல்லுவார்; அக்கதைகளின் விஷயங்களைப் பலவிடங்களில் நேரில் கொண்டுபோய்க் காண்பிப்பார்; ஒரு நாள், தமது மாணுக்கர்களைக் கிராமத்தின் அருகில்உள்ள தோப்பிற்கு அழைத்துக்கொண்டுபோனுர். அங்கே ஓர் மரத்தில், ஒரு பெரிய பட்சியும், இன்னொரு சின்ன பட்சியும் இருந்தன. பெரியபட்சி தன் வாயிலிருந்த, ஏதோ வொன்றைச் சின்ன பட்சியின் வாயில் ஊட்டிக்கொண் டிருந்தது. வேறு ஒரு பெரிய

பட்சி தன் வாயில் சிலவற்றைக் கடித்துக்கொண்டு வந்து, அம் மரத்தின் மேல் இருந்த பெரிய பட்சியின் பக்கத்தில் வைத்து விட்டுப் போய் விட்டது. உபாத்தியாயர் சிறுவர்களுக்கு அதைக் காண்பித்தார். சிறுவர்களில் ஒருவன், "ஐயா! அந் தக் கிளையில் உட்கார்ந்து சிறு பட்சிக்கு ஊட்டும் பட்சி, சிறுபட்சிக்கு என்ன வேண்டும்? அப்பட்சி என்ன ஆட்டுகிறது? இப்பொழுது பறந்து போன பட்சி யென்ன கொண்டுவந்து வைத்தது?" என்று கேட்டான். சிறுவர்கள் யாவரும் உபாத்தி யாயர் சொல்லுக்கு எதிர்ப்பார்த் திருந்தார்கள். உபாத்தியாயர், "சிறுவர்களே! கிளையில் உட்கார்ந் திருக்கும் பெரிய பட்சி அதன் பக்கத்தில் இருக் கும் சின்னப் பட்சியின் தாய்ப் பறவை. அதன் வாயிலிருந்து ஊட்டுவது, தான்மென்று தின் னத் தகுந்த மெதுவாகிய இரையைத் தன் குஞ் சுக்கு ஊட்டுகிறது. பறந்து போன பறவை ஆண் பறவை. அது தனக்குக் கிடைத்த இரைகளைக் கொண்டு வந்து இவைகளுக்காக வைக்கிறது. இப்படித்தான்; உங்கள் தந்தைமார் கஷ்டப்பட்டு வேலைசெய்து, ஆகாரங்களைச் சேகரித்துக் கொ ண்டுவந்து, வீட்டில் சேர்க்கின்றார்கள் உங்கள் தாய் மார்கள்; அவைகளை யுண்டு சீரணித்து; நீங்கள் குழந்தைகளா யிருந்தபொழுது நீங்கள் குடிக்கத் தகுந்தபாலை உங்களுக்குப் புகட்டினார்கள். நீங்கள் குடித்து வளர்ந்தீர்கள் நீங்கள் எப்பொழுதும்

பெற்றோர்கள் மேல் பட்சமா யிருக்கவேண்டும்" என்றார். சிறுவர்கள் சந்தோஷப் பட்டார்கள். உபாத்தியாயர்; பிள்ளைகளுடன் பள்ளிக்கூடத் தைச் சேர்ந்தார். 4

அன்புடனே தாயளிக்கும் அப்பமொடு சிற்றுண்டி
இன்பமுடன் உண்டு எழில்சாலை—தன்னில்
கொடுத்த கணக்குப்பூ கோளபடம் மற்றும்
எடுத்தெழுதி பாடத்தை ஏற்று.

(ப-ரை.) அன்புடனே-தயவோடு, தாய்-உனது தாயார், அளிக்கும்-கொடுக்கின்ற, அப்பமொடு-அப்பத்துடனே, சிற்றுண்டி-சிறு பலகாரங்களை இன்பமுடன் - சந்தோஷத்துடன், உண்டு - சாப்பிட்டு, எழில் - அழகிய, சாலைதன்னில் - பள்ளிக்கூடத்தில், கொடுத்த - உபாத்தியாயர்கொடுத்த, கணக்கு - கணக்குகளும், பூகோளம் - பூமியின்வடிவத்தைக்காண்பிக்கும், படம்-படங்களும், எடுத்து-எடுத்து, எழுதி-எழுதி, பாடத்தை-நீபடிக்கவேண்டியபாடத்தை, ஏற்று-படித்து மனத்தில் ஏற்றுக் கொள்.

(கதை.) மாணிக்கம், இரத்தினம், என்ற இரண்டு சகோதரர்கள்; ஒரேவகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தார்கள். மாலையில் இருவரும் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வரும்பொழுது, மாணிக்கம் அழுதகண்ணும் வாடிய முகத்துடன் வருவான். இரத்தினம் சந்தோஷமாய் வருவான். ஒரு

நாள் மாலை; இவர்களின் தந்தை தெய்வசகாயம் என்பவர்; மாணிக்கத்தைப் பார்த்து, "மாணிக்கம் நீ ஏன் விசனமாயிருகின்றாய்?" என்றார். மாணிக்கம், "எனக்கு இரண்டுகால்களும் நோவுகின்றன" என்றான். தந்தை யவன்கால்களின் வலிக்குப் பரிகாரஞ் செய்தார். மாணிக்கம் பலநாளும் வாடிய முகத்துடனே, வந்துகொண்டிருந்தான். தந்தை யதன்காரணத்தை இரத்தினத்தைக்கேட்டார். ரத்தினம் உண்மையைச் சொன்னால் அண்ணன் தன்னை வழியில் அடிப்பான் என்று நினைத்து, "உபாத்தியாயரைக் கேட்டால் தெரியும்" என்றான். தந்தை இவர்கள் வாசிக்கும் வகுப்பின் உபாத்தியாயரிடம் போய் விசாரித்தார். உபாத்தியாயர் "ஐயா! நான் தினமும் அவனைக் காலையில்; வீட்டில் கணக்கு, பூகோளம், சரித்திரப்பாடம், வாசகம் முதலியவைகளில் சிலபாகங்களை யெழுதி வரும்படியாய்ச் சொல்லியனுப்புகிறேன்; அவன் ஒருநாளும் எழுதி வந்ததில்லை. அதனால் அவன் தண்டிக்கப்படுகிறான். இரத்தினம் எனது கட்டளையின்படி தவறாது எழுதிவந்து, என்னைச் சந்தோஷப் படுத்துகிறான்" என்றார். தந்தை யிரண்டொரு நாள் தான் கிட்டவிருந்து மாணிக்கத்தை யெழுதச்செய்தார். பிறகு மாணிக்கம் தினமும் எழுதிக்கொண்டுபோய் உபாத்தியாயரைச் சந்தோஷப் படுத்தினான். 5

பாடம் படிக்குங்கால் பள்ளிக் கணக்குகளைப்
போடும் பொழுதுஉந்தன் புத்தியினால்-கூடிடாது

உள்ளவற்றைத் தந்தைதாய் உந்தன் சகோதரர்பால்
தெள்ளனவே கேட்டுத் தெரி.

(ப-ரை.) பாடம்-பாடங்களை, படிக்குங்கால்-படிக்கின்றபொழுது, பள்ளி - பாடசாலையில், கணக்குகளை-(கொடுத்த) கணக்குகளை, போடும்பொழுது - போடுகின்றகாலத்தில், உந்தன் - உனது, புத்தியினல்-அறிவினல், கூடிடாதுள்ளவற்றை-தெரியாதிருக்கின்றவைகளை, உந்தன்-உனது, தந்தை-தகப்பன், தாய்-தாயார், சகோதரர்-உடன்பிறந்தவர்களிடத்தில், தெள்ளன-தெளிவாக, கேட்டு-கேட்டு, தெரி-அறிந்துகொள். ஏ-அசை.

(கதை.) பெங்களூரில் சதுர்வேத சித்தாந்த சபா பாடசாலையில் கணபதியென்னும் சிறுவன் வாசித்துக்கொண் டிருந்தான். அவன் வகுப்பில் இருபது பிள்ளைகள் வாசித்துக்கொண் டிருந்தார்கள். அவர்களில் கணபதி வகுப்பில் ஒவ்வொரு நாளும் பாடங்களைச் செவ்வையாய் ஒப்பிவிப்பான். கணக்குகளை வழியுடன் சரியாய்ப்போடுவான். உபாத்தியாயர் கேட்டவினக்களுக்குத் தகுந்த விடையளிப்பான். உபாத்தியாயர்; அவன்மேல் மிகவும் அன்பாயிருந்தார். ஒருநாள் உபாத்தியாயர் மற்ற பிள்ளைகளுக்கு எதிரில் "கணபதி உனக்கு வீட்டில் யார் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பவர்கள்?" என்று கேட்டார். கணபதி; என் பெற்ருேர்கள் வாசித்தவர்கள். எனது அண்ணன் ராயபஹதூர் ஆர்க்காடு நாராயணசாமி முதலியார் ஐஸ்கூலில்

வாசிக்கின்றார். அவரிடம் எனக்குத் தெரியாதவைகளைக் கேட்டுப் படித்துக் கொள்கின்றேன்; எனது தமயனுக்கு விடுமுறை வந்தகாலத்தில் அவரிடம் கணக்குகளைப்போடும் வழிகளைக் கற்றுக் கொள்ளுகிறேன்" என்றான். உபாத்தியாயர், "கணபதி! நீ செய்வது மிகவும் நல்லகாரியம், உன்னைப் போல் இவர்கள் யாவரும் செய்வார்களேயானால் எனக்கு அதிக புகழுண்டாகும்" என்றார். அன்று முதல் வகுப்பின்பிள்ளைகள் யாவரும் கணபதியைப் போல் செய்து, உபாத்தியாயருக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கினார்கள். 6

மனப்பாடம் செய்ய மதித்துள்ள வற்றை
நினைப்பாகப் புத்தகநீ பார்த்துத்—தனிப்பிழையும்
வாராமல் பல்முறையும் வாசித்தால் நெஞ்சிலுறும்
தாராள மாய்ச்சொல்வாய்த் தான்.

(ப-ரை.) நீ-நீ, மனம்-மனத்தில், (தங்கியிருக்கும்படியாக) பாடம்-பாடங்களை, செய்ய-ஞாபகப் படுத்திஒப்புவிக்க, மதித்துள்ளவற்றை-எண்ணியவைகளை, புத்தகம்-புஸ்தகத்தை, நினைப்பாக-கவனத்துடன், பார்த்து-பார்த்து, தனிப்பிழையும் - ஒருபிழையும், வாராமல் - உண்டாகாமல், பல்முறையும் - பலதடவையும், வாசித்தால் - படித்தால், நெஞ்சில்-மனத்தில், உறும்-தங்கும், (அதனால்) தாராளமாய்-தடையில்லாமல், சொல்வாய்-ஒப்புவிப்பாய், தான்-அசை.

(கதை.) திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பாக்ய நாதன் என்னுஞ் சிறுவன் வாசித்துக் கொண்டிருந்தான். புத்தகத்தைப் பார்க்காமல் ஒப்புவிக்க வேண்டியபாடங்களை, ஒப்புவிக்க மிகவும் வருத்தப் படுவான். ஒருநாளும் சரியாக ஒப்புவிக்க மாட்டான். உபாத்தியாயர், அவன் ஞாபகசக்தியற்றவன் என்று நினைத்தார். திண்ணைப் பள்ளிக்கூடங்களின் வழக்கங்களைப்போல், நின்று படித்தல், குனிந்து படித்தல், குனிந்து ஒருகாலை பூமியில் ஊன்றி மற்றொருகாலைத் தூக்கிக்கொண்டு படித்தல், முதலாகிய தண்டனைகளை அவனுக்குக்கொடுப்பார். ஒருநாள் அவ்வீதியின் வழியாகப் போய்க் கொண்டிருந்த, ஞானக்கண் பிள்ளை யென்னும் ஐஸ்கூல் உபாத்தியாயர் ஒருவர், பாக்கிய நாதன் படும் கஷ்டத்தைப் பார்த்து, அவன் அருகில் போய்ச் சற்றுநேரம் நின்றார். அவன் படிக்கும் விதத்தையறிந்துகொண்டார். அவனை அக்கஷ்டத்தில் இருந்து நீக்குவதற்கு எண்ணினார். அந்தப் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயரிடத்தில் போய் உட்கார்ந்தார். சிலநேரம் அவரிடம் பள்ளிக்கூடத்தின் விஷயங்களைப் பற்றிப் பேசியபின், "ஐயா! இச் சிறுவன் ஏன் குனிந்து படிக்கின்றான்?" என்றார். உபாத்தியாயர், "இவன் புத்தகத்தைப் பார்க்காமல் ஒப்புவிக்க வேண்டிய பாடங்களை ஒரு நாளும் சரியாய் ஒப்புவிக்கின்றான் இல்லை. அதனால் குனிந்து படிக்கிறான்" என்றார். ஞானக்கண்

பிள்ளை தயவு செய்து இன்று இவனை மன்னிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்; நான் இவனுக்குச்சற்று நேரம் பாடம்சொல்லிக்கொடுத்துப் பாராமல் ஒப்பு விக்கும்படிச் செய்கின்றேன்" என்றார். உபாத்தியா யர், "செய்யும்" என்றார். ஞானக்கண் பிள்ளை, பாக் கியநாதனைத் தனதுபக்கத்தில் உட்காரச்செய்து, அந்தப் பாடத்தைப் பார்த்துப் படிக்கச் சொன் னார். பையன் தப்பாய்ப் படித்தான். பிள்ளையவர் சிறுவனைக் கவனிக்கச் சொல்லி, தான் ஒருதரம் தெளிவாய்ப் படித்தார். பையனை அப்படியே பார் த்து வாசிக்கச் செய்தார். சிறுவன் வாசித்தான். பத்துதரம் வாசிக்கச் செய்தார். பார்த்து வாசித் தான். பார்க்காமல் ஒப்புவிக்கச் சொன்னார். சரியாக ஒப்புவித்து விட்டான். ஞானக்கண் பிள்ளை, உபாத் தியாயருக்கு வந்தனஞ் செய்துவிட்டுச் சென்றார். அன்றுமுதல் பையன் பாராமல் ஒப்புவிக்க வேண் டிய பாடங்களைப் பிழையில்லாமல் பலதரமும் பார் த்து வாசிக்கப் பழகினான்; அதனால், உபாத்தியாய ரது தண்டனைக்குத் தப்பித்துக்கொண்டான். 7

காலம் உளதேல் கரங்கால் இடுப்பகலம்
தோளும் பலமடைய தோல்பந்து—பாலருடன்
மெல்லன பேசி மிகவும் சுருசுருப்பாய்
எல்லையினில் ஆடங் கிருந்து.

(ப-ரை.) காலம்-(நீ செய்யவேண்டிய வேலை களைச்செய்து மிகுந்த) நேரம், உளதேல்-இருக்கு

மானல், எல்லேயினில்-(உனது வீட்டின் அருகில் உள்ள) இடத்தில், கரம்-கைகள், கால்-கால்கள், இடுப்பு-இடுப்பு, அகலம்-மார்பு, தோளும்-தோள்களும், பலமடைய - பலத்தைப்பெற, தோல்பந்து-தோலால்செய்தபந்தை, பாலருடன்-(உன்னையொத்த) சிறுவருடன், மெல்லன-மெதுவாகப், பேசி-(ஆட்டத்தில் உண்டாகும் பேச்சுகளைப்):பேசி, மிகவும் சுருசுருப்பாய்-(சோம்பல் இன்றிச்)சுருசுருப்பாய், அங்கு - அவ்விடத்தில், இருந்து-சேர்ந்து, ஆடு-விளையாடுவாய்.

(கதை.) பணக்காரர் ஒருவருக்குச் சிங்காரம் என்ற பெயரையுடைய சிறுவன் இருந்தான். அவன் வண்டியில் உட்கார்ந்து பாடசாலைக்குப் போவான். வீட்டிற்கு வண்டியில் வருவான். சற்று நேரம் படிப்பான். வேண்டியவற்றை யுண்பான். மெதுவான படுக்கையில் படுத்து உறங்குவான். நாளடைவில் சதைப்பிடித்துப் பருத்தவனுனன். மெத்தையை விட்டுக் கீழேயிறங்கி வீதியில் நிற்கும் வண்டியில் ஏறவருவதற்குள் பலதரமும் பெருமூச்சுவிடுவான். அடிக்கடி நோயில் வருந்துவான். அடுத்த வீட்டில் இருந்த, ஏழைச் சிறுவனுகிய தெய்வநாயகம் பாடங்களைப் படித்தபின், வீட்டின் அருகில் உள்ள வெளியில் சிறுவர்களுடன் விளையாடிக் காலத்தில் உண்டு, பாடசாலைக்குப்போவான். மாலையில் பாடசாலையை விட்ட பின்னும், சற்று

நேரம் தோழருடன் விளையாடி, வீட்டிற்கு வருவான். ஏழைத் தந்தைதாயர்களுக்குத் துணையாய்ச் சிறுவேலைகளைச் செய்வான். வைத்தியரை ஒரு நாளும் பார்த்தறியான். சிங்காரத்தின் தந்தை தெய்வநாயகத்தைப் பார்த்தபொழுதெல்லாம், தம் மகனுக்கும், தெய்வ நாயகத்திற்கும், உள்ள சரீரபலத்தைக்குறித்து எண்ணுவார் கடைசியாகத் தமது வீட்டிற்குவரும் வைத்தியரிடமும் தம்மகன் அடிக்கடி நோயில் வருந்துவதையும், தெய்வ நாயகம் நோய்என்னும் பேயினுக்கு இடம் கொடுக்காமல் திடசரீரமுடையவனு யிருப்பதையும் சொன்னார். வைத்தியர், "ஐயா! நாளையதினமே சிங்காரத்தைத் தெய்வ நாயகத்துடன்கூட்டி, நல்லபந்து ஒன்று வாங்கிக் கொடுத்து, இவ் விசாலமான முற்றத்தில் விளையாடச் செய்யும்" என்றார். பணக்காரர் அப்படியே செய்தார். சில நாளைக்குள் சிங்காரம் தெய்வ நாயகத்தைப்போல் இருக்கக்கண்டு மகிழ்ந்தார்.

8

ஆடி அயர்ந்தவுடல் அண்டியுள்ள மாசுநீர்
ஓடி மலிந்தநாற்றம் உள்ளதெலாம்—ஓடடவே
நல்நீர்க் குளித்துடனே நல்துணியில் மெய்துடை
உன்மேல் உடையை உடு. [த

(ப-ரை.) ஆடி-விளையாடி, அயர்ந்த-சோர்ந்த, உடல்-உடம்பில், அண்டியுள்ள-சேர்ந்திருக்கும், மாசு - அழுக்கு, நீர்ஓடி-வெயர்வை நீர்வழி

ந்து, மலிந்த-மிகுந்த, நாற்றமுள்ளதெலாம்-நாற்றங்கள்யாவும், ஓடிட-நீங்க, நல்நீர்-சுத்தமான நீரில், குளித்து - குளித்து, உடன் - சீக்கிரத்தில், நல்துணியில் - சுத்தமான துணியில், மெய்-உடம்பை, துடைத்து-ஈரம்போகத்துடைத்து, உன்மேல் உடையை - உனதுமேல்உடுப்பை, உடு-அணிந்துகொள்.

(கதை.) கோபாலன் என்னும்சிறுவன் வகுப்பில் தனது தோழருடன் உட்கார்ந் திருந்தான். பக்கத்தில் இருந்த அரங்கன், "கோபாலா என்னடா நாற்றமடிக்கிறது?" என்ருன். கோபாலன், சற்றுநேரம் சுவாசித்து, "ஒன்று மில்லை" என்ருன். அரங்கன், கோபாலன் இடதுகைப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த; சண்முகத்தைப் பார்த்து, "இங்கே நாற்றமடிக்க வில்லையா?" என்ருன். சண்முகம் "ஆமாம். கோபாலன் வந்ததுமுதல் நாற்றமடிக்கிறது" என்ருன். கோபாலன், கோபத்துடன் "என்னடா நாற்றம் என்மீதில் அடிக்கிறது? இதோ எனதுதோளை முகந்துபார்" என்று தனது தோளைச் சண்முகத்தின் முகத்தண்டைக் கொண்டு போனுன். உடனே சண்முகத்தின் மூக்கிற்குக் குபீலென்று நாற்றம் வீசியது. சண்முகம், "என்னடா உள்ளதைச் சொன்னுல் வள்ளென்று விழுந்து, தோளைக் கொண்டுவந்து மூக்கில் இடித்தாயே? வேண்டுமானுல் அரங்கனை முகர்ந்து பாக்கச்

சொல்" என்றான். அரங்கன்; "முகர்ந்து பார்ப்பதேன்? நான் முன்னமே தெரிந்து கொண்டேன். சொன்னால் கோபிப்பான் என்றுதான் பொதுவாகக்கேட்டேன்" என்றான். கோபாலன் தன் தோளைத்தானே முகர்ந்து பார்த்தான். வியர்வை நாற்றம் கொஞ்சம் அடிப்பதை யுணர்ந்தான். தோழர்கள் பழிப்பார்கள் என்று உண்மையைச் சொல்லாமல், எனக்குத் தெரியவில்லை யென்றான். அரங்கன், "ஆமாம் தங்களுடைய குற்றம் தங்களுக்குத் தெரியாததுபோல் உன் நாற்றம் உனக்குத் தெரியவில்லைபோல் இருக்கிறது" என்றான். கோபாலன் தனக்குள் தனது உடம்பு நாறுவதற்குக் காரணம் என்னவென்று யோசித்தான். காலையில் வெயர்வை யுண்டாகும்படி விளையாடியபின் குளிக்காமல் இருந்ததுவே என்று தெரிந்து கொண்டான். அன்றுமுதல் தினமும் குளிக்கத் தொடங்கினான். சுத்தமாயிருந்தான். 9

இல்லத்தில் உள்ளவுண வெவ்வுணவோ அவ்வுணவை
உள்ளத்தில் அன்புடனே உண்டபின்—வள்ளத்தின்
நீரருந்திச் சற்றிருந்து நேயமுடன் பின்செய்யும்
காரியங்கள் இன்னதென காண்.

(ப-ரை.) இல்லதில்-வீட்டில், உள்ள-இருக்கின்ற, உணவு-சாப்பாடு, எவ்வுணவோ-எவ்வித சாப்பாடோ, அவ்வுணவை - அந்தஉணவை, உள்ளத்தில்-மனத்தில், அன்புடன்-பிரியமுடன்,

உண்டபின்-சாப்பிட்டப்பிறகு, வள்ளத்தின் - கிண்ணத்தின், நீர்-நீரை, அருந்தி-குடித்து, சற்றிருந்து - கொஞ்சம்நேரம் உட்கார்ந்திருந்து, பின்-பிறகு, நேயமுடன்-சந்தோஷத்துடன், செய்யும்-செய்கின்ற, காரியங்கள்-வேலைகள், இன்னதென-இன்னின்னவை என்று, காண்-நினை.

(கதை.) செல்வம்மாளின் தமக்கைச் சுந்தரம்மாள் தனது தங்கையைச் சந்தித்து, "க்ஷேமமா?" என்றாள். செல்வம்மாள், "க்ஷேமந்தான் அக்காள்" என்றாள். தமக்கை, "சிறுவன் வடிவேலன் இப்பொழுது எப்படியிருக்கின்றான்?" என்றாள். "நான் அவனுடைய தொந்தரவினால்தான் கடன்காரியானேன், ஆகின்றேன்" என்று தங்கைசொன்னாள். "எப்படி?" என்று தமக்கைக்கேட்டாள், எனது வரும்படிக்குத் தக்கபடி உண்டியைச் செய்து படைத்தால்; அதைக் கையால் தொடுவதுமில்லை, இலைக்குமுன் உட்காரும்பொழுதே "இன்றைக்குப் பதார்த்தங்கள்என்ன?பக்ஷணங்கள்என்ன?" என்று கேட்கின்றான். பலவித பதார்த்தங்களும், பக்ஷணங்களும் இருந்தால், சந்தடியின்றி, சாப்பிட்டு எழுந்திருக்கிறான். குறைவானால் சண்டையிடுகின்றான்; மற்றவர்களுக்கும் இடவேண்டும். சம்பாதிக்கும் தலைவர் ஒருவர் வருமானத்திற்குமேல் செலவானால் என்னசெய்கின்றது? "கட்டாயமாகக் கடன்படவேண்டியதாக இருக்கின்றது" என்று

O-1(S)
N33

தங்கை சொன்னாள். சுந்தரம்மாள், "ஆறுமுகம் எப்படி?" என்றாள். செல்வம்மாள், "அவன் மிகவும் நல்லவன். வீட்டில் இருப்பதை இன்பமாய்உண்டு, நீர்குடித்து, சற்றுநேரம் உட்கார்ந்திருந்து, பிறகு தான் செய்யவேண்டிய வேலையைச் செய்கின்றான். அவனைப்போலப் பத்துப்பிள்ளைகள் இருந்தாலும் வருத்தமில்லாமல் வளர்த்துவிடலாம். வடிவேலன் ஒருவனைச் சமாளிப்பதுதான் அதிக கஷ்டமாகஇருக்கின்றது" என்று சொல்லி விசனப் பட்டாள். சுந்தரம்மாள் வடிவேலையழைத்துப் புத்திமதிகளைப் புகட்டினாள். வடிவேலன், 'தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை' என்னும் வாக்கை யுணர்ந்து நல்ல புத்தியையடைந்து தானும் ஆறுமுகனைப்போல் நடந்து தாயை மனமகிழச் செய்தான். 10

படிக்கின்ற புத்தகத்தின் பக்கத்தின் அட்டை
அடுத்திருக்க மிக்கபலம் ஆகும்—தடித்தநல்
காகிதத்தின் காப்பிட்டுக் காண்போர்க் குனதென
வாகாய்ப் பெயர்எழுதி வை.

(ப-ரை.) படிக்கின்ற-வாசிக்கின்ற, புத்தகத்தின்-புத்தகத்தின், பக்கத்தின்-பக்கத்திலிருக்கும், அட்டை-அட்டை, அடுத்திருக்க-(கிழியாமல்) சேர்ந்திருக்க, மிக்க-மிகுந்த, பலமாகும்-உறுதியாகும், தடித்த-கனத்த, நல்-சுத்தமான, காகிதத்தின்-காகிதத்தினால், காப்புஇட்டு-உறைபோட்டு, காண்போர்க்கு-(புத்தகத்தைப்) பார்ப்பவர்க்கு,

85192

உனதுஎன-உன்னுடையதென்று தெரிந்து கொள்ள, வாகாய்-திருத்தமாய், பெயர்-உன் பெயரை, எழுதி-(புத்தகத்தின் மேலும்உள்ளும்) எழுதி, வை-வைத்துக்கொள்.

(கதை.) வெஸ்லின் பாடசாலேயில் வாசித்துக் கொண்டிருந்த டேவிட் என்னும் சிறுவன் தனது புத்தகங்களுக்கு தடித்தகாகிதத்தினல் உரையிட்டு, அதன்மேலும்; உள்ளும், தனதுபெயரைத்திருத்த மாகவும், பார்ப்பவர்க்குத் தெளிவாகவும் எழுதி யிருந்தான். ஒருநாள் வித்தியாவிசாரணே யிலாகா வைச் சேர்ந்த அதிகாரியொருவர் அந்தப் பாட சாலேக்கு வந்தார். அவருக்குப் பிள்ளேகளின் கல்வி யைப் பரீக்ஷை செய்வதுடன் அவர்கள் புத்தகங் கள் வைத்திருக்கும், ஒழுங்கைக் கவனிப்பதுவே, முதன்மையான வழக்கமாக விருந்தது. வழக்கத் தைப்போல், அவர் டேவிட்டின் புத்தகங்களேப் பார்த்தார். அவைகளின் ஒழுங்கையும், சுத்தத்தை யும், ஒவ்வொன்றின் உரைகளின்மேலும் உள்ளும் “ஜே. டேவிட்” என்று எழுதியிருப்பதைக் கவனி த்து,“டேவிட் நீயேன் இந்தப்புத்தகங்களின் அட் டைகள்மேல் உரையிட் டிருக்கின்றுய்?” என்றுர். டேவிட்,“புத்தகங்களின் அட்டைகள் அழுக்காகா மலும், கையில்விடும் வேர்வையினுல் அவைகள் நனேந்து, நைந்து, கிழிந்து உள்ளேயிருக்கும் தாள்கள் பிரிந்து போகாமல் இருப்பதற்கு, ஐயா”

என்ருன். இன்ஸ்பெக்டர், "இப்புத்தகங்களின் மேலும் உள்ளும் ஏன் உன்பெயரெழுதி வைத்திருக்கின்ருய்?" என்ருர். டேவிட், "அவைகளிஞல் நான் எனதுபெயரை; உங்களுக்குச் சொல்லாமலே தாங்கள் என்பெயரைத் தெரிந்துகொண்டு, என்னை டேவிட் என்று அழைக்க உதவின" என்ருன். அவர், சிறுவனது சிறந்தவிடைக்கு மனமகிழ்ந்து, "இன்னம் என்னபயன்?" என்ருர். டேவிட், "நான் ஒருசமயம் இப்புஸ்தகங்களில் ஒன்றைமறந்து இங்கேவிட்டுவிட்டுப் போனல் எனது தோழர்களாவது, இச்சாலையின் சேவகர்களாவது என்னுடையதென்று தெரிந்து, எனக்குக் கொடுப்பதற்குப் பயன்படும் என்று, உபாத்தியாயர் கற்பித்திருக்கின்ருர் ஐயா" என்ருன். இன்ஸ்பெக்டர், "நீ செய்திருப்பது நல்ல மாதிரி, நீ செய்திருப்பதைப் போல் வகுப்பில் உள்ள பிள்ளைகள் ஒவ்வொருவரும் செய்யவேண்டும்" என்று யாவருக்கும் சொல்லிச் சென்ருர். 11

பள்ளிக்குப் போதுமுன் பாடங்கள் அன்றையநாள்
உள்ளநல் புத்தகங்கள் ஒவ்வொன்றுந்—தெள்ளனவே
கொண்டெழுதுங் கற்பலகைக் கோட்டற் குரியனவும்
வெண்கடிதம் ஓடேகு வீர்.

(ப-ரை.) பள்ளிக்கு-பாடசாலைக்கு, போதுமுன்-போவதற்குமுன்னே, அன்றையநாள்-அன்றையதினம், பாடங்கள் உள்ள-(படிக்கவேண்டிய) பாடங்கள் இருக்கும், புத்தகங்கள் - புத்தகங்கள்

ஒவ்வொன்றும்-ஒவ்வொன்றையும், தெள்ளன-தெளிவாக, கொண்டு-எடுத்துக்கொண்டு, எழுதும் - எழுதத்தகுந்த, கற்பலகை - கல்பலகை (சிலேட்,) கோட்டற்கு-எழுதுதற்கு, உரியனவும்-தகுதியாயுள்ளவைகளாகிய, (பென்சில்களும்) வெண்-வெள்ளையாகிய, கடிதம்ஒடு-காகிதத்தோடு, ஏகுவீர்-போவீர்.

(கதை.) திருமலைஎன்னும் சிறுவன் ஒருநாள் பாடசாலையின் அருகில் போனபொழுது; தனது வகுப்பின் சிறுவர்களைச் சந்தித்தான். அன்றைக்கு நடக்கப்போகும்; பாடபுத்தகங்கள் தனதுகையில் சரியாக இருக்கின்றனவாவென்று பார்த்தான், ஒருபுத்தகம் குறைவாயிருந்தது. எழுதும் பென்சிலும்இல்லை அவைகளை யெடுத்துவர வீட்டிற்குச் சற்றுத்தூரம் போனபொழுது, பள்ளிக்கூடத்தில் அடிக்கும் மணிச்சத்தத்தைக் கேட்டு ஓடிவந்தான். பாடசாலையில் கடவுள்வணக்கம் முடிந்துவிட்டது. வகுப்பில்போய் உட்கார்ந்தான். உபாத்தியாயர், " நீ என் நேரம்கழித்துவந்தாய்?" என்றார். திருமலை விழித்தான். உபாத்தியாயர் "இன்று மன்னித்தேன்" என்றார். வகுப்பின்முதலில் இருந்த சிறுவன் வாசகபாடம் வாசிக்கத் தொடங்கினான். திருமலை அடுத்தபையனிடம் "கொஞ்சம்புத்தகத்தைக் காண்பி" என்று கெஞ்சினான். அப்பையன் முணுமுணுத்துக்கொண்டே, காண்பித்தான். உபாத்தி

யாயர் வாசகபாடத்தில் உள்ள சில அரும் பதங்
களுக்கு வேறுபதங்கள் சொல்லி, எழுதிக்கொள்
ளும்படிசொன்னார். திருமலைவேறு ஒருபையனைப்
பென்சில்கேட்டான். அப்பையன், "ஐயா! திருமலை
சும்மா தொந்தரவுசெய்கிறான்" என்றான். வகுப்
பின்பிள்ளைகள் எழுதுவதைவிட்டு, திருமலையைப்
பார்த்தார்கள். உபாத்தியாயர் திருமலையை விசா
ரித்துப், புத்தகமும் பென்சிலும் கொண்டுவராத
தற்கு அவனை நிற்கும்படி செய்தார். அழுதுக்
கொண்டே நின்றான், வீட்டிற்குச் சென்று, பெற்
றோர்களிடம் "உபாத்தியாயர் கெட்டவர்; அவர்
எப்பொழுதும் என்னைத் தண்டிக்கின்றார்" என்று
முறையிட்டான். பெற்றோர்கள் திருமலையின் சகோ
தரனை யனுப்பி. உபாத்தியாயரை விசாரித்து
உண்மையை அறிந்தார்கள். திருமலை தண்டனை
யடையாதிருக்கும்படி அவனுடையதாய் மறு
நாள் அவன் பாடசாலைக்குப் போகுமுன் அன்
றைக்கு நடக்கும் பாடபுத்தகங்கள், பென்சில், காகி
தம் முதலானவற்றை எடுக்கச்சொல்லி, தான்
ஒருமுறை சரிபார்த்து அனுப்பினாள். ஒரு
நாளோடு போகாமல் சிலநாள்கள் செய்தாள். வீட்
டில்உள்ளவர்கள் திருமலையை ஜாக்கிரதை யில்லா
தவன் என்று பரிகசித்தார்கள். திருமலை வெட்க
மடைந்து, அன்றுமுதல் தான் கொண்டுபோக
வேண்டிய பாடபுத்தகங்களைத் தவறாது கொண்டு
சென்று கல்வியில்தேர்ச்சி யடைந்தான்.

ஏகும் பொழுதில் எதிர்ப்பக்கம் பின்னிரண்டு
ஆகுமெழில் சக்கரமா டஸ்வமிட்டு—ஏகுமுயர்
பற்பல வண்டிகளைப் பார்த்திடமாய்ப் போவாய்நீ
கற்களினல் காலிடராக் கா.

(ப-ரை.) ஏகும்பொழுதில்-(பள்ளிக்கூடத்திற்குப்) போகும்பொழுது, எதிர்-எதிரிலும், பக்கம்-பக்கத்திலும், பின்-பின்புறமும், இரண்டாகும்-இரண்டுமுதலாகும், எழில்-அழகிய, சக்கரம்-சக்கரங்களையுடையனவாய், மாடு-மாடு, அஸ்வம்-குதிரை, இட்டு-கட்டி, ஏகும்-ஓடுகின்றனவும், உயர்-(இவையன்றி) உயர்வாகிய, பற்பல-பலவித, வண்டிகளை-வண்டிகளை, நீ-நீ, பார்த்து-பார்த்து; இடமாய்-உனது இடதுகைப்பக்கமாய், போவாய்-போவாய், கற்களினல்-(வழியில்உள்ள) கல்லுகளின்மேல், கால்-கால்கள் (பட்டு,) இடரா-துன்படையாமல், கா-கார்த்துக்கொள்.

(கதை.) பாட்டி மீனுக்ஷி அவசரமாக வீட்டிற்குவந்து, "தையநாயகம்! பையன் பள்ளிக்கூடத்திற்குப் போய்விட்டானு?" என்றுள். தையநாயகம், "இன்னும் போகவில்லை. புத்தகங்களையெடுக்கின்றுன்" என்றுள். கிழவி, "அப்பா! போகும் பொழுது வேடிக்கை பார்க்காமல், தெருவின் ஓரமாய்ப்போ, அனியாயமாக அப்புசெட்டியார் மகன் வண்டியில் அகப்பட்டு, சாகப் போனுன். தெய்வச்செயலால் தப்பினுன்" என்றுள்.

பையன் "எப்படிப்பாட்டி?" என்றான். மீனாக்ஷி "வீதியில் கலியாணப்பெண்ணும் பிள்ளையும் வண்டியில் வருவதைப் பார்த்துக்கொண்டே, வீதியின் நடுவில் போய்க்கொண்டிருந்தான். நான் எதிரில் வந்துகொண்டிருந்தேன். பையனுக்குப்பின்னால் ஜட்காவண்டி வந்துகொண்டிருந்தது. அதற்குப்பின் பைசிகல்மேல் ஒருவன் ஏறிவந்தான். எதிரில் ஒரு பெரியவண்டி குதிரைகள் இல்லாமல் பேயைப்போல் பொம், பொம் என்று கத்திக்கொண்டுவந்தது. அதன்பெயர் என்னமோ சொல்லுகிறார்கள். அதை யெனக்குச் சரியாய்ச் சொல்லவரவில்லை நீசொல்லு" என்றாள். சிறுவன் "மோடார்காரா?" என்றான். "ஆமாம் அந்தவண்டிதான் வந்தது. பையன் பயந்து, இடதுகைப் பக்கம் ஒதுங்கினான். அதற்குள் பைசிகல் கிட்டவந்துவிட்டது. பின்பக்கம் போகத் திரும்பினான். ஜட்காவண்டி வந்துவிட்டது. என் வயிறு குபீலென்று பற்றிக்கொண்டது. "ஐயையோ! பையன் பையன்" என்று கத்தினேன். நல்லகாலம் பைசிகல் மேல் இருந்தவன், கீழேகுதித்து, பையன் கையைப் பிடித்துத் தன்பக்கமாக இழுத்துக்கொண்டான்" என்றாள். அதைக்கேட்ட பையன், 'மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்' என நினைத்து "பாட்டி நான் வெகு ஜாக்கிரதையாகவே போகிறேன், நீங்கள் பயப்படாதீர்கள்" என்று சொன்னான். பாட்டி சமாதானமடைந்தாள்.

செல்லும் வழியில் சிறுமறுகில் பிள்ளைகள்
பல்விதமாய் ஆட நீ பார்த்தால்— நில்லாமல்
கட்டிய புத்தகங்கள் கைசோர விட்டிடாமல்
திட்டமாய்ப் பாதைஓரம் செல்.

(ப-ரை.) நீ-நீ, செல்லும்-(பள்ளிக்கூடத்திற்குப்) போகின்ற, வழியில்-வழியில், பிள்ளைகள்-பையன்கள், சிறுமறுகில்-சின்னசந்துகளில், பல்விதமாய்-பலவிதமாய், ஆட-விளையாட, பார்த்தால்-கண்டால், நில்லாமல்-(அங்கே) நில்லாமல், கட்டிய-(ஒன்றாகச்சேர்த்து) கட்டிய, புத்தகங்கள்-(உனது) புத்தகங்களை, கைசோர - கையிலிருந்து நழுவ, விட்டிடாமல்-விட்டிடாது, திட்டமாய்-நேராய், பாதையோரம்-வழியின்ஓரத்தில், செல்-போ.

(கதை.) சாமிநாதன் பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்தான். போகும்வழியின் ஓர்சந்தில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவன் அங்கு நின்றான், ஒரு பையன் அவனை, "என்னடா மணி யென்றான்" சாமிநாதன், "ஒன்பது மணி" யென்றான். பையன், "நீயும் விளையாட வருகின்றாயா?" என்றான். சாமிநாதன் தனக்குள் இன்னம் பள்ளிக்கூடத்தில் பாடம் ஆரம்பிக்க ஒரு மணி நேரம் இருக்கின்றது, நாமும் சற்றுநேரம் விளையாடிப் பிறகு போகலாம் என்று நினைத்தான். புத்தகங்களை அங்கே ஒருபக்கம் வைத்துவிட்டு,

அவர்களுடன்கூடி விளையாடினுன்; பொழுதையும் புத்தகங்களையும் மறந்தான்; அதிகநேரம் கழிந்த பின் நினைத்தான்; புத்தகங்கள் வைத்தவிடத்தைப் பார்த்தான். அவை இல்லை. பக்கங்களில்தேடினுன். தன்னேடு விளையாடிய பிள்ளைகளைக் கேட்டான் பிள்ளைகள், "பார்க்கவில்லை" என்ருர்கள். அழு தான்; வீட்டில் அடிப்பார்கள் என்று பயங்கொண் டான். எங்கே போவேன் என்று எண்ணினுன். மணி பதினென்றுக்கு மேல் ஆய்விட்டது. தன் னுடன் விளையாடிய பிள்ளைகளும் போய்விட்டார் கள். சாமிநாதன் வீட்டிற்குப் போகத்திரும்பிச் சற்றுத்தூரம் போய்ப் பள்ளிக்கூடத்தை நினைத் தான். நாளைக்குப் போனுல் உபாத்தியாயர் "ஏன் நேற்று வரவில்லை?" என்று கேட்டால், என்ன சொல்லுவது என்று எண்ணினுன். வீட்டில்தகப்ப னுர் "புத்தகங்கள் எங்கே?" என்ருல் என்னசொல் வது! என்று நினைத்தான். புத்தியில் ஒன்றும் தோன்ருமல் திகைத்து, நின்றுகொண்டிருந் தான் கடைக்குப்போய்க் கொண்டிருந்த அவன் தகப்பனுர் அவனைப்பார்த்து, "ஏன் பாடசாலைக் குப் போகவில்லை? எங்கே உன்புத்தகங்கள்?" என் ருர். ஒன்றும் சொல்லாமல் அழுதான். வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் உண்மையையறிந்து, தண்டித்து விசனப்பட்டார். சாமிநாதன் அதன் பிறகு 'தந்தைச் சொல்மிக்க மந்திரமில்லை' என் னும் ஒளவை வாக்கை யுணர்ந்து வீட்டை விட்

டால் நேராய் பாடசாலைக்குப் போவான். பாட சாலையைவிட்டால் வீட்டிற்குவந்து சேருவான். தந்தையுங் கண்டு களித்தார். 11

நெறியில் கொடியர் நெருங்கியே உன்பால்
பிரியமாம் பேச்சுகளைப் பேசிச்—சிறிதான [ர்
தின்பண்டம் காற்றாடிச் செண்டுபல ஈந்தழைப்பா
அன்பாகி வாங்கா தகல்.

(ப-ரை.) நெறியில்-(பள்ளிக்கூடத்திற்குப் போகும்) வழியில், கொடியர்-கெட்டவர்கள், உன் பால்-உன்னிடத்தில், நெருங்கி-வந்து, பிரியமாம்-உனக்குச் சந்தோஷத்தைத்தரும், பேச்சுகளை - வார்த்தைகளை, பேசி-சொல்லி, சிறிதான-அற்பமாகிய, தின்பண்டம்-பலகாரம், காற்றாடி-காற்றாடி, செண்டு - பந்து, பல - பலவித விளையாட்டுப் பொருள்கள், ஈந்து-கொடுத்து, அழைப்பார்-(தங்களுடன்வரும்படி) கூப்பிடுவார்கள், அன்பாகி-(அவர்கள் கொடுக்கும் பொருள்களிடத்தில்) ஆசையாகி, வாங்காது-வாங்காமல், அகல்-நீங்கு.

(கதை.) குள்ளன் என்னும் திருடன் வீதியில் போய்க்கொண் டிருந்த இராமலிங்கத்தைப் பார்த்து, "அப்பா ராமலிங்கம்! ராமலிங்கம்!" என்று கூப்பிட்டான். இராமலிங்கம் திரும்பிப் பார்த்தான். குள்ளன் அவன் கிட்டசென்று. "நான் உனது சித்தப்பா கடையில் இருக்கின்றவன் உன்னை அவர் அடுத்த மைதானத்தில், நடக்கும் சர்க்கஸ்

ஆட்டத்திற்கு அழைத்து வரும்படி என்னையனுப்பினார்” என்றான். இராமலிங்கம், “இப்பொழுது எது ஆட்டம்?” என்றான். குள்ளன், “இன்று மாலை ஆட்டம் இதோ உனக்கு இந்தச்சங்கிலியுடன் பொம்மைக் கெடியாரமும்; இந்தப்பந்தும் கொடுக்கச்சொல்லி என்னிடம் கொடுத்தார்” என்றான். இராமலிங்கம் கெடியாரத்தை வாங்கிச் சொக்காவில்உள்ள பொத்தான் துவாரத்தில் சங்கிலியைமாட்டி மேல்ஜோபியில் கெடியாரத்தைப் போட்டான். மறுபடியும் ஒருதடவை யெடுத்துப் பார்த்தான். நன்றாயிருக்கிறது நான் திருப்பக் கொடுக்கமாட்டேன்” என்றான். குள்ளன், “கொடுக்க வேண்டாம் நீயே வைத்துக்கொள்” என்றான். இராமலிங்கம் பந்தை ஒருதரம் பூமியில் அடித்துப்பார்த்து “வெகுவுயரம் கிளம்புகிறது” என்று சொல்லிச் சொக்காயின் வலதுபக்கத்தில் உள்ள ஜோபியில் போட்டுக்கொண்டு, “நான் வீட்டிற்குப் போய்ப் புத்தகங்களை வைத்துவிட்டு ஓடிவருகின்றேன்” என்றான். குள்ளன், “உனது சித்தப்பா சர்க்கஸ் கூடாரத்தண்டைக் காத்துக்கொண்டிருக்கின்றார், புத்தகங்களை யென்னிடம் கொடு, நான் உன்னை உன் சித்தப்பாவிடம் கொண்டுபோய் விட்டு விட்டு, புத்தகங்களை வீட்டில் சேர்த்து விடுகின்றேன், சீக்கிரம்வா!” என்று அவனிடம் ஒரு துண்டு கற்கண்டு கட்டியைக் கொடுத்து, அழைத்துக்கொண்டு போனான். அவ்விடம் ஜனங்கள் நட

மாட்டம் இல்லாத இடமாயிருந்தது. குள்ளன், "உனது சித்தப்பா டிக்கட்டுவாங்கப் பணமில்லாததினுல் உன் காப்புகளைக் கழற்றிக்கொண்டுப்போய், மார்வாடி கடையில்வைத்துப் பணம் வாங்கிவரும்படிசொன்னுர்." என்று காப்புகளைக் கழற்றிக்கொண்டு "நீ இங்கேதான் இரு நான் இதோ ஒரு நொடியில் வந்துவிடுகிறேன்" என்று ஓடினுன். பயத்தினுல் இராமலிங்கம் அப்பொழுது சும்மாயிருந்தான். குள்ளன் போனபின் காப்புகள் இல்லாததினுல், அழுதுகொண்டே குள்ளன் போனவழியே தேடிக்கொண்டு போனுன். அவ்வழியில் வந்துகொண்டிருந்த போலீஸ் வீரன், சிறுவனைச் சந்தித்தான். இராமலிங்கம் அவனைப் பார்த்து, அதிகமாக அழுதான். போலீஸ் வீரன் அவன் சங்கதிகளை விசாரித்துப் பையனுல், அவனைப் பெற்ருேர்கள் இருப்பிடம் அறிந்து, அழைத்துக்கொண்டுபோய் ஒப்புவித்து, பையன் இழந்த நகையின் பெயரும் விலை முதலியவற்றையும், மோசம் நடந்த காலத்தையும் தனது சிறுபுத்தகத்தில் எழுதிக்கொண்டு போனுன். அதுமுதற்கொண்டு ராமலிங்கம் முகமறியாதவர்கள் அழைத்தால் போகாமல் வெகு ஜாக்கிரதையுடன் இருந்தான். 15

கல்விக் கழகத்தில் காலத்திற் குள்சென்றங்
கோல்லும் இடத்தினில் உட்கார்ந்து—மேள்ளனவே
வோதுவிப்பார் வந்தால் உடனேழுந்து வந்தனம்
காதலுடன் செய்தல் கடன்.

(ப-ரை.) கல்விக்கழகத்தில்-பாடசாலைக்குள், காலத்திற்குள்-(நியமித்திருக்கும்) வேளைக்குமுன், சென்று-போய், அங்கு-அங்கே, ஒல்லுமிடத்தில்-இடமுள்ள இடத்தில், மெள்ளனவே-சந்தடிசெய்யாமல், உட்கார்ந்து-உட்கார்ந்து, ஓதுவிப்பார்-உபாத்தியாயர், வந்தால்-வந்தபொழுது, உடன்-உடனே, எழுந்து-எழுந்து, காதலுடன்-அன்புடன், வந்தனம்-வந்தனம், செய்தல்-செய்வது, கடன்-முறை.

(கதை.) உபகாரச்சம்பளம் (பென்சன்) வாங்கிக்கொண்டிருந்த, ராமச்சந்திர ஐயரும், தாமஸ் பிள்ளையும் பேசிக்கொண் டிருந்தார்கள். தாமஸ் பிள்ளையின்மகன், புத்தகக்கட்டுடன் புறப்பட்டான். தாமஸ் பிள்ளை, "என்னடா மணி?" யென்றார். பையன், "ஒன்பதேகால்" என்றான். தாமஸ் பிள்ளை இன்னம் முக்கால்மணி சாவகாசம் இருக்கின்றதே இதற்குள் என்ன அவசரம்?" என்றார். பையன், "நான் மெள்ள நடந்து போவதற்கு அரை மணிக்குமேல் ஆகிவிடும் பள்ளிக்கூடத்தின் மணியடிக்கப் பத்து அல்லது ஐந்து நிமிஷங்கள் இருக்கும்பொழுதே அங்கே இருப்பேன்" என்றான். ராமச்சந்திர ஐயர், "சரிதான் இவன் புறப்பட்ட வேளை, காலத்திற்குச் சற்று முந்தியே பள்ளிக்கூடத்தில் இருப்பதுதான் நல்லது. நாம் படித்த பொழுது ஒருநாள் நேரங்கழித்துப்போய்ப் பட்ட

கஷ்டம் கவனமிருக்கின்றதா?" என்றார். சாமிநாத பிள்ளை, "சீதாராமராவ் வகுப்பில்தானே?" என்றார். ஐயர், "ஆம் அதை நினைத்துக்கொண்டால் இப்பொழுதுதான் அனுபவிப்பதுபோ லிருக்கின்றது. அப்பொழுது அவர் நம்மை தண்டித்ததனால் நம்முடைய கெட்டவழக்கம் நம்மை விட்டுவிட்டு ஓடிப்போயிற்று". என்றார் தாமஸ் பிள்ளை, "ஆம் நாம் அவருக்கு வந்தனம் சொல்லவேண்டும் அவர் அப்பொழுது, பழக்கிய வழக்கம் இத்தனை வயதாகியும் விடாமல், எந்தக்காரியத்திலும் ஐந்து நிமிஷங்கள் முந்தியே இருக்கும்படி செய்கின்றது" என்றார். அவர் அருகில் இருந்த அடைக்கலவம்மாள், "தம்பி! நீங்கள் என்ன கஷ்டம்பட்டீர்கள்?" என்றாள். தாமஸ்பிள்ளை "அக்கா! சீதாராமராவ் வெகு கண்டிப்பானவர். நாங்கள் ஒருநாள் நேரங்கழித்துப் போனோம். அதனுடன் வகுப்பில் சென்றவுடன் உபாத்தியாயருக்கு. வந்தனம் செய்யும் வழக்கத்தையும் அன்று மறந்தோம், நேரங்கழித்துப்போனதற்கு அரைமணி நேரமும், வந்தனஞ்செய்யாததற்கு மற்றும் அரைமணிநேரமும், ஆக ஒருமணிநேரம் நிற்கச்செய்தார். ஒருமணி நேரம் நின்றதனால் கால்கள் வலித்தது கொஞ்சமல்ல" என்றார். நடந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தபையன் "நான் எப்பொழுதும் பாடசாலைக்கு நேரங்கழித்துப் போகவுமாட்டேன். உபாத்தியாயருக்கு வந்தனம் செய்யாமலிருக்கவு மாட்டேன்"

என்று சொல்லி, விரைவாகநடந்து காலத்திற்குள் பாடசாலைக்குப்போய்ச்சேர்ந்து, கல்வியில் தேர்ச்சி யடைந்தான். 16

அன்றையநாள் பள்ளியினில் ஆகின்ற காரியங்கள்
நன்றாய் நிறைவேற நாள்மலர்ந்து - பொன்றாத
பண்புடைய செங்கமலப் பரஞ்சோதி தாள்துதித்
அன்புடன் போற்றல் அணி. [து

(ப-ரை.) அன்றையநாள் - அன்றையதினம், பள்ளியினில் - பாடசாலையில், ஆகின்ற - நடக்கின்ற, காரியங்கள் - வேலைகள், நன்றாய் - செவ்வையாய், நிறைவேற - நடக்க, நாள்மலர்ந்து - அப்பொழுது தான்மலர்ந்து, பொன்றாத - அழியாத, பண்புடைய - குணமுடைய, செங்கமலம் - சிவந்த தாமரைபோன்ற, தாள் - பாதங்களையுடைய, பரஞ்சோதி - கடவுளை, அன்புடன் - பக்தியுடன், துதித்து - தோத்திரம்செய்து, போற்றல் - வணங்குதல், அணி - அழகு.

(கதை.) சென்னைக் கடற்கரையில் கோவிந்தசாமிநாயகர் தனதுசிறுவனுடன் நின்றிருந்தார். கடலில் வெகு தூரத்திலிருந்து ஒருகப்பல் வந்து கொண்டிருந்தது. ஒரு கிழவியும் ஓர் மனிதனும் அக்கப்பலைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கிழவி "கப்பல் இன்னம் கால்மணி நேரத்திற்கெல்லாம் துறைமுகம் வந்து சேர்ந்துவிடும்" என்றாள். அம் மனிதன், "பாட்டி! இந்தப்பெரியகடலில், கப்ப

னுக்கு யாதொரு அபாயமும் வரவொட்டாமல், ஓட்டிக்கொண்டு வரும் கப்பலின் மாலுமித் தலைவனாகிய ஏ. எப். ஜேம்ஸ் மிகவும் தெய்வபக்தியுள்ளவன்,, என்றான். கிழவி, "ஆம் இந்தக் கப்பலில், நான் இரங்கோனுக்குப் பலமுறை யாத்திரை செய்திருக்கின்றேன். கப்பல் புறப்படுமுன்; தான் முழங்காலில் உட்கார்ந்து, கடவுளைத் துதித்துப் பின்பு, கப்பலை நடத்துவான். அவனுடைய தெய்வபக்திதான், இதுவரையில் இக் கப்பலுக்கு யாதொரு துன்பமும் நேரிடாதபடி, காப்பாற்றிக் கொண்டு வருகிறது" என்றாள். இதைப்பக்கத்திலிருந்த சிறுவன் கேட்டு நகைத்தான். கோவிந்தசாமி நாயகர், "என்ன ஆச்சரிய வார்த்தையைக் கேட்டாய்? ஏன் நகைத்தாய்?" என்றார். சிறுவன், "கப்பலையோட்டுவதற்குக் கூடவா கடவுளைத் துதிக்கவேண்டும்?" என்றான். நாயகர், "ஆம் கட்டாயம் பண்ணவேண்டும். ஒவ்வொரு வேலையின் ஆரம்பத்தில் கடவுளைத் துதித்தே ஆரம்பிக்க வேண்டும். ஏன்? உங்கள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் உங்கள் பாடங்களைத் துவக்கும் முன் என்ன செய்கின்றார்?" என்று கேட்டார். சிறுவன், "எங்களுடைய முதல்வேலை கடவுள் பிரார்த்தனையே" என்றான். நாயகர், "சரி அப்படியே எல்லா வேலைகளுக்குமுன் கடவுள் பிரார்த்தனை அவசியம் செய்யவேண்டும்" என்றுசொல்லிச் சிறுவனை அழைத்துக்கொண்டு போனார்.

உட்காரச் சொன்னபின் உட்கார்ந்து நற்குருபால்
நட்பாய்ப் பொறுமையுடன் நல்கிய—நுட்பப்
பொருள்பாடம் வாசிமுழுப் புள்ளிமுக்கால் காலா
நிறுத்தும் குறிகள்பால் நின்று. [கும்

(ப-ரை.) உட்காரச் சொன்னபின்-(உபாத்தியாயர்) உட்காரும்படி கட்டளையிட்டபிறகு, உட்கார்ந்து-உட்கார்ந்து, நல்குருபால்-நன்மையைக் கொடுக்கும் உபாத்தியாயரிடத்தில், நட்பாய்-அன்பாய், பொறுமையுடன்-அவசரப்படாமல், நல்கிய-அவர்கொடுத்த, நுட்பம்-நுண்மையாகிய, பொருள்பாடம்-அருத்தமுடையபாடத்தை, முழுப்புள்ளி-முற்றுப்புள்ளி, முக்கால்-முக்கால்புள்ளி, கால்-கால்புள்ளி,(முதலாகிய) நிறுத்தும்-நிறுத்தி வாசிக்கவேண்டிய, குறிகள்பால்-குறிகளிடத்தில், நின்று-நிறுத்தி, வாசி-படி.

(கதை.) பட்டிக்காட்டில், திண்ணைப் பள்ளிக்கூடத்தில் ஓர் உபாத்தியாயரிடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் குமாரசாமி என்னுஞ் சிறுவன், பட்டணத்தில் இருக்கும் தனது அம்மான் வீட்டிற்கு வந்தான். அம்மான், அவன் தாய் தந்தைகளின் க்ஷேமத்தை விசாரித்தார். மத்தியான போஜனமும் தீர்ந்தது. தன்மகன் குழந்தைவேலுடன் குமாரசாமி உட்கார்ந்திருந்தான். அப்பொழுது அவர் "குமாரசாமி நீ எத்தனையாவது பாடபுத்தகம் வாசிக்கின்றாய்?" என்றுகேட்டார்.

குமாரசாமி, "நான் மூன்றும்வாசகபுத்தகம் வாசிக்கின்றேன்" என்றான். குழந்தைவேல் தன்னிடத்திலிருந்த மூன்றும்வாசக புத்தகத்தைக்கொடுத்தான். அம்மான், "குமாரசாமி! நீ படிக்கிறது இந்தப்புத்தகந்தானா பார்?" என்றார். குமாரசாமி அதை நன்றாய்ப் பார்த்து, "ஆம். என்றான். அவர் அதில் ஒரு பாடத்தைக் காண்பித்துப் படிக்கச் சொன்னார். குமாரசாமி அப்பாடத்தை யதிவேகமாய்த் தடதடவென்று வாசித்து முடித்தான். குழந்தைவேல், கலகலவென்று சிரித்தான். குமாரசாமி, "குழந்தைவேல்! ஏன் சிரித்தாய்? என்று கேட்டான். குழந்தைவேல் சும்மாயிருந்தான். குமாரசாமி அம்மானைக் கேட்டான், அவர் குழந்தைவேல் சிரித்ததன் காரணத்தைத் தெரிந்துகொண்டு "குமாரசாமி; புத்தகத்தையவனிடம் கொடு, பிறகு காரணம் சொல்லுகிறேன்" என்றார். குமாரசாமி கொடுத்தான். குழந்தைவேல் அப் பாடத்தில் உள்ள கால்புள்ளி முக்கால்புள்ளி முழுப்புள்ளிகள் உள்ள இடங்களில்நிறுத்தியும், வினக்குறிப்புள்ள விடங்களில் கேட்பதைப் போன்ற வொலியுடனும் ஆச்சரிய குறிப்புள்ள விடங்களில் ஆச்சரியப் பட்டதைப் போலும், நேர்வாசகக் குறிகள்உள்ள விடங்களின் மத்தியில் உள்ளவைகளை அப்பொழுதுதான் நேராகப் பேசியவர்கள் சொற்களைப் போல் வாசித்து முடித்தான். குமாரசாமி, "எங்கள் பள்ளிக்கூடத்தில் இப்படிப் படிக்கிறதில்லை. இவன் படித்

தது, புதுமாதிரியாக இருக்கின்றது" என்முன். அம்மான், "உனது பழையமாதிரியைக் கேட்டுத் தான் குழந்தைவேல்சிரித்தான்"எனச்சொல்லினர். குமாரசாமி, பட்டணத்தில் இருந்த நாள்களில் குழந்தைவேலிடம் வாசகம் படிக்கவேண்டிய முறைகளைக் கற்றுக்கொண்டான். சில நாள்கள் கழிந்தபின், தனது ஊருக்குப் போய்த் தான் படிக்கும் பள்ளிகூடத்துச்சிறுவர்களுக்கும் கற்றுக் கொடுத்து யாவரையும் தேர்ச்சி யடையச்செய் தான். 18

வாசகத் துள்ள வளம்பெறு சொல்களுக்கு
நேசமுடன் வேறுபதம் நேடியபின்—ஏசலிலா
துற்ற பெயர்வினை யொட்டும் உரியிடைச்சொல்
கற்றல் இளைஞர் கடன்.

(ப-ரை.) வாசகத்தில் - (படிக்கும்) வாசக பாடத்தில், உள்ள - இருக்கின்ற, வளம்பெறு - பல அருத்தமுள்ள, சொல்களுக்கு - மொழிகளுக்கு, வேறுபதம் - வேறேபதங்களை, நேசமுடன் - அன்புடன், நேடியபின் - தேடியறிந்தபின், ஏசலிலா - தவருது, உற்ற - அவ்வப்பதங்களுக்குரிய, பெயர் - பெயர், வினை - வினை, ஒட்டும் - பெயர்வினைச்சொல் களைச்சேர்ந்த, உரி - உரி, இடை - இடை, சொல் களை - சொல்லுகளை, கற்றல் - அறிந்துகொள்ளல், இளைஞர் - சிறுவர்களின், கடன் - முறை.

(கதை.) உபாத்தியாயர் முத்துசாமி பிள்ளை வகுப்பில், பலபிள்ளைகள் வாசித்துக் கொண்டிருந்

தார்கள். ஒருநாள் அவர்களில், தணிகாஜலம் என்னுஞ் சிறுவன் வாசகபாடத்தை வாசித்தான். உபாத்தியாயர் அந்தப் பாடத்தில் உள்ள அரும் பதங்களுக்கு வேறு பதங்களும் பெயர், வினை, யிடை, யுரி யென்னும் இலக்கணத்திற்குச் சில உதாரணங்களை அவனைச் சொல்லச் சொன்னார். தணிகாஜலம்,"ஐயா! அவைகள் இந்தப்பாடத்தில் எழுதியில்லை" என்றான். உபாத்தியாயர் அடுத்த சிறுவர்களைக் கேட்டார். சிலர் தவறாது சொன்னார்கள். உபாத்தியாயர், தணிகாஜலத்தை வகுப்பின் கடைசியில் போகச் செய்தார். தணிகாஜலம் மற்றச் சிறுவர்களை நோக்கி, "நீங்கள் சொல்லியவைகள் எங்கே இருக்கின்றன?" என்றுகேட்டான். அவர்களில் சாமிவேல், "எங்கள் ஞாபகத்தில்" என்றான். தணிகாஜலம், "யார் அங்கே இருக்கச் செய்தார்கள்" என்றான். சாமிவேல், "உபாத்தியாயர்" என்றான். "தணிகாஜலம், எப்பொழுது" என்றான். சாமிவேல், "வாசகபாடம் நடந்த கடந்த திங்கட்கிழமை நீ அன்று பாடசாலைக்குவந்த ஞாபகம் உனக்கு இல்லையா?" என்றான். தணிகாஜலம், "வந்த ஞாபகம் நன்றாயிருக்கிறது" என்றான். சாமிவேல், "இப்பொழுது நாங்கள் சொல்லியவைகள் அன்று உபாத்தியாயர் சொல்லிய ஞாபகம் இல்லையா?" என்றான். தணிகாஜலம், "அவர் சொல்லியவைகள் இவ் வாசகத்தில் எழுதி யில்லாததனால் "எனது ஞாபகத்தில் இருக்கவிடங் கொடுக்க

வில்லை" என்றான். சாமிவேல், "அவர் சொல்லி யவை களுக்கு உன் ஞாபகத்தில் இடங்கொடுக் காததினால் அவரும், உனக்கு வகுப்பில் முதலில்உட் கார இடங் கொடுக்கவில்லை" என்றான். இவர்கள் சம்பாஷணையைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார் கள். அதுமுதல் தணிகாஜலம், உபாத்தியாயர் சொல்லும் இலக்கணக் குறிப்புகளை ஞாபகத்தில் வைத்துத் தன் இடத்தைக் காப்பாற்றிக் கொண்டு கல்வியில் தேர்ச்சி யடைந்தான்.

19

எழுத்தறிய நேரும் எழிலறிவு ஆசான்
அழுத்தமுற போதிக்கும் அஞ்சொல்-வழுக்கின்றி
எற்று வகுப்பில் இருப்பவர்கள் கூறுமறு
மாற்றம் அனைத்தும் மதி.

(ப-ரை.) எழுத்து-இலக்கணத்தை, அறிய-தெரிந்துகொள்ள, எழில்-அழகிய, அறிவு-புத்தி, நேரும் - உண்டாகும், ஆசான் - உபாத்தியாயர், போதிக்கும்-கற்றுக்கொடுக்கும், அஞ்சொல்-அழகிய சொற்களை, வழுக்கின்றி-தவறாமல், எற்று-மனத்திற்கொண்டு, வகுப்பில் - உன் வகுப்பில், இருப்பவர் - இருக்கின்றவர், கூறும் - சொல்லு கின்ற, மறுமாற்றம்-விடைகள், அனைத்தும்-எல்லாம், மதி- நினை.

(கதை.) கிருஷ்ணமூர்த்தி என்னும் சிறுவன் விளையாட்டில் மிகுந்த விருப்ப முடையவன்; பாட சாலையைவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் மெத்த

நேரம் விளையாடுவான். இரவில் சற்றுநேரம்படிப்பான். சாப்பிட்டுப்போய்ப் படுத்துக்கொள்வான், காலையில் இரண்டொருதரம் படிப்பான். பள்ளிக்கூடத்திற்குக் காலத்திற்குச் சரியாய்ப் போய்விடுவான். அவனைப் பெற்றோர்கள் அவன் விளையாட்டில் மெத்தவும் நேரத்தைக் கழிக்கின்றானென்று விசனப்படுவார்கள். ஒருநாள் அவன் வகுப்பின் உபாத்தியாயரிடத்திலும் "கிருஷ்ணமூர்த்தி மெத்த விளையாடுகிறான்" என்றார்கள். உபாத்தியாயர் அவனைத்தண்டித்துப் படிக்கச் செய்யவேண்டுமென்று எண்ணினார். ஆனால் அவர் தன்வகுப்பில் வாசிக்கும் பிள்ளைகள் வாசித்தப் பாடங்களைப் பற்றிப் பரீக்ஷித்தல் வழக்கமானதினால், அவ்வாரத்தின் கடைசிநாளில் பரீக்ஷை செய்தார். கிருஷ்ணமூர்த்தி அந்தப்பரீக்ஷையில், அநேகமான கேள்விகளுக்குச் சரியானவிடைகளை எழுதி, எண் அதிகம் பெற்றான். உபாத்தியாயர், அவன் வீட்டில் விளையாடுகிறவனாயிருந்தாலும் வகுப்பில் நடப்பதை மெத்தவும் கவனிக்கின்றானென்று தெரிந்து சந்தோஷமடைந்தார். பெற்றோர்களுக்கு உண்மையுணர்த்தினார். அவர்கள் கவலையற்றிருந்தார்கள்.

20

சொல்வதெழுதல் தொடங்குங்கால் ஆசிரியர்
சொல்லுமுழு வாக்கியம் சொல்லியபின்—ஒல்லைச்
சிறிதும் பிழைபடாமல் சீராக என்றும்
வரிகள் சரியெழுதி வை.

(ப-ரை.) சொல்வது-சொல்லுவதை, எழுதல்-எழுதுவதற்கு, தொடங்குங்கால்-ஆரம்பிக்கும்பொழுது, ஆசிரியர்-உபாத்தியாயர், சொல்லும்-சொல்லுகின்ற, முழுவாக்கியம்-வாக்கியம்முழுமையும், சொல்லியபின்-சொன்னபிற்பாடு, ஒல்லை-சீக்கிரத்தில், சிறிதும்-ஒன்றும், பிழைபடாமல்-தப்பில்லாமல், சீராக-திருத்தமாக, என்றும்-எப்பொழுதும், வரிகள்-வரிகளை, சரியெழுதி-ஒழுங்காகஎழுதி, வை-கீழேவை.

(கதை.) ஒருகிராமத்தில் முனிசிப் குமஸ்தா ஒருவர் இருந்தார். அந்தக் கிராமத்தில் இருக்கும் ஓர் குடியானவன், முனிசிப்புக்கு ஓர்மனுவெழுதிக் கொடுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. அவன் ஓர்கடிதாசியின் தாள்கொண்டு, குமஸ்தாவிடம் போய், எழுதிக் கொடுக்கும்படி கெஞ்சினான். குமஸ்தா தான் எழுதப்படாதென்று பன்னிரண்டு வயதுடையவனாகிய முருகன் என்னும் பெயரையுடைய குடியானவன் மகனையழைத்து வரும்படிசெய்தார். அவனிடத்தில் அந்தத் தாளைக் கொடுத்து "முருகா! நான் சொல்லுகின்றவைகளை இதில் எழுது" என்றார். முருகன் அப்படியே அவர் சொல்லியவைகளைக் கவனத்துடன், ஒரு பிழையுமில்லாமல் திருத்தமாய்ப் பதங்கள் ஒன்றோடு ஒன்றுசேராமல், வரிகளை ஒழுங்காய் எழுதிமுடித்தான். குமஸ்தா வாங்கி வாசித்தார். குடியானவனைப் பார்த்து "உன்மகன் கெட்டிக்

காரன் இவன் இன்னம் கொஞ்சகாலம் படித்தால் என்னைப்போல் குமஸ்தாவேலையைச்செய்து உன்னைக்காப்பாற்றுவான்” என்றார். குடியானவன், மெத்தவும் சந்தோஷமடைந்தான். குமஸ்தாவிற்கு வந்தனஞ் செய்தான். முருகனையழைத்துக்கொண்டுபோய், மனுவை முனிசீப்பிடம் செலுத்தினான். மகனை வெகு அக்கரையுடன் படிப்பித்தான். முருகன் எழுதுவதில் மிகவும் தேர்ச்சியடைந்தான். பாடசாலையில் பரிசு பெற்றுப்புகழடைந்தான் 21

முற்றிற்று.

85192

ஸ்ரீ கணநாயகர் அச்சுக்கூடம், சென்னை:—1933.

352
917

எம்மிடம் தயாராயுள்ள புத்தகங்கள்

நீதியிற்சிறந்த நாவல் எது? சுகுணங் கதன் அல்லது பரோபகாரி	0	12	0
சிறுமியர் மெய்பழக்குஞ் சித்திரப் பாடலும் கலியாணப் பாட்டும்	0	1	0
ஐந்தெழுத்தைச் சிந்திக்கும் பதிகமும் உண்ணுமுலை யம்மன் பதிகமும்	0	0	6

(அச்சிலுள்ளவை)

பெரிய எழுத்தில் புதிய அம்மானைகள்.

தமயந்தியன்பு அல்லது நளராஜன் நற்குணம்
சகுந்தலைவிதி அல்லது துறுவாசர் சாபம்
சாவித்திரிவிரதம் அல்லது சத்தியவான்பிழைப்பு
சிற்றின்பமந்திரம் அல்லது ஜெயாம்பாளின் ரகசியம் (நாவல்)
ஸ்ரீ கணேசர் திருப்புகழ் 100-பாடல்
ஆறுமுகக் கடவுள் துதி பதிகமும் போரூர் முருகன் பதிகமும்

எமது விலாசம்:—

ஸ்ரீ கணநாயகர் அச்சுக்கூடம்
2/229, தங்கசாலை தெரு, சென்னை.